## விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(செப்டம்பர் 9-ம் தேதி முதல் செப்டம்பர் 13-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (4.9.15- 7.9.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 9.4 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34- 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25- 26 |
| வானம் (ஆக்டா) | 5- 7 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 70- 75 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 55- 80 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 5- 15 |
| காற்றின் திசை | 180- 200 |

**13.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>9.9.15 | நாள் 2<br>10.9.15 | நாள் 3<br>11.9.15 | நாள் 4<br>12.9.15 | நாள் 5<br>13.9.15 |
| மழை (மி.மீ.) | 1 | 1 | 1 | 2 | 1 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 33 | 33 | 33 | 34 | 34 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 25 | 25 | 26 | 26 |
| வானம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 70- 75 | 71- 74 | 70- 75 | 67- 73 | 66- 72 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 9/ தெற்கு | 9/ தெற்கு | 9/ தெற்கு | 9/ தெற்கு | 9/ தெற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| வடகிழக்கு பருவமழை பருவ சாகுபடி | பண்ணைக்கருவிகள் உபயோகம் | மானாவாரியில் பல்வேறு சாகுபடி செயல்களான நிலம் தயாரித்தல், விதைத்தல், களையெடுத்தல் மற்றும் அறுவடை செய்தல் போன்றவற்றை சரியான சமயத்தில் செய்யவும் வேலையாட்கள் பற்றாக்குறையை சமாளிக்கவும் பண்ணைக் கருவிகளை திறம்பட பயன்படுத்தவும். விதைப்பு கருவி, |

| | | |
|---|---|---|
| | | களையெடுக்கும் இயந்திரம் மற்றும் அறுவடை செய்யும் இயந்திரம் போன்ற பண்ணை இயந்திரங்கள் குறைந்த அளவு நேரத்தில் அதிக பரப்பளவில் வேலைகளை முடிக்க உதவுகின்றன. டிராபிகல்டர் என அழைக்கப்படும் விதைப்பு கருவியை பயன்படுத்தி ஆழச்சால் அகலப்பாத்தி அமைத்தல், அடியுரமிடுதல் மற்றும் விதைத்தல் ஆகிய மூன்று செயல்களையும் ஒரே நேரத்தில் செய்து முடிக்க முடியும். |
| | நிலம் தயாரித்தல் | மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்க ஆழச்சால் அகலப்பாத்திகள், பகுதிப்பாத்திகள் மற்றும் பார்கள் போன்ற முறைகளை பின்பற்றி நிலம் தயாரிக்கவும். ஆழச்சால் அகலப்பாத்தி அமைக்கும் கருவி, கரை அமைக்கும் கருவி மற்றும் பார் அமைக்கும் கருவி போன்றவற்றை பயன்படுத்தி குறைந்த அளவு நேரத்தில் அதிக பரப்பளவில் வேலைகளை செய்து முடிக்கமுடியும். |
| | இடுபொருட்களை தயார்படுத்துதல் | மானாவாரியில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக விதைகள், விதைநேர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் மருந்துகள், இயற்கை உரங்கள் மற்றும் செயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்களை வாங்கி தயார்நிலையில் வைத்திருக்கவும். |
| | இரகங்களை தெரிவு செய்தல் | மானாவாரியில் வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் பயிரிட பயிர் சாகுபடி பருவத்தில் ஏற்படும் வறட்சியை தாங்கி பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலை எதிர்த்து வளரும் இரகங்களை தெரிவு செய்யவும். பருத்தியில் KC 3, மற்றும் PA 255, மக்காச்சோளத்தில் CoH(M) 6, சோளத்தில் K 8 மற்றும் K 12, பாசிப்பயிரில் CO 6, சூரியகாந்தியில் CO 4, கம்பில் CO(Cu) 9, எள்ளில் TMV 3, கொத்தமல்லியில் CO 4, சென்னாவில் KKM 1 ஆகிய இரகங்கள் மானாவாரிக்கு உகந்தவை. |
| தக்காளி, மிளகாய் | காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் காய்க்கும் பருவத்திலுள்ள தக்காளி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்க்கவும். |

குறுஞ்செய்தி-: செப்டம்பர் *9- 11*& *13*ம் தேதி: *1* மி.மீ. செப் *12*: *2* மி.மீ. மானாவாரியில் மண்& ஈரத்தை பாதுகாக்க ஆழச்சால் அகலப்பாத்தி, பகுதிப்பாத்தி& பார் அமைக்க பண்ணை கருவிகளை பயன்படுத்தவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி